சென்னை அரும்பொருள் காட்சியகம்.

*வினா 48—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, எழும்பூரில் உள்ள அரும்பொருள் காட்சியக (மியூசியம்)-த்தை மத்திய அரசு தன்னிடம் ஒப்படைத்துவிடுமாறு அண்மையில் மாநில அரசுக்கு ஏதேனும் எழுதியுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சென்னை எழும்பூரில், உள்ள அரும்பொருள் காட்சியகத்தை (மியூசியம்) மத்திய அரசு தன்னிடம் ஒப்படைத்து விடுமாறு மாநில அரசுக்கு அண்மையில் ஏதும் எழுதவில்லை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூரிலுள்ள அந்த மியூசியத்தை இன்னும் அதிக மக்கள் வந்து பார்க்கின்ற அளவிற்கு ஏதேனும் ஏற்பாட்டினை அரசு செய்யுமா? அதற்கு ஏதேனும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நாம் மக்களைக் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் அருங்காட்சியகத்தை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்திற்கு ஏற்ப அப்படிப்பட்ட யோசனைகளை பரிசீலிக்கலாம்.

சந்திரசேகரபுரம்–உடையாளூர் இணைப்புப் பாலம்.

*வினா 49—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம், வலங்கைமான் இரு ஒன்றியங்களைச் சேர்ந்த, சந்திரசேகரபுரம், உடையாளூர் கிராமங்களை இணைக்க குடமுரட்டி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க ஒன்றிய பொது நிதியிலிருந்து செலவிட இரு ஒன்றியத்திலிருந்தும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?